Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. வேகம் ஒரு _____ அளவு. அதே சமயம் திசைவேகம் ஒரு _____அளவு.
2. தொலைவு – கால வரைபடத்தின் எந்த ஒரு புள்ளியிலும் சாய்வின் மதிப்புத் தருவது _____.
3. பொருள் ஒன்று x = 20 மீட்டர் என்ற நிலையில் ஓய்வில் உள்ளது. அதன் இடப்பெயர்ச்சி – காலம் வரைபடம் ---------- அச்சுக்கு நேர்கோடாக இருக்கும்.
4. எதிர்மறை முடுக்கத்தை _____ என்றும் கூறலாம்.
5. இடப்பெயர்ச்சி – காலம் வரைபடத்தில் உள்ள பரப்பளவு குறிப்பிடுவது _____.
6. பொருளொன்றின் _____ ஏற்படும் மாற்றம் இடப்பெயர்ச்சி ஆகும்.
7. கூட்ட நெரிசலில் செல்லும் பேருந்தின் இயக்கம் _____.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

8. திசைவேகம் – காலம் வரைபடத்தின் சாய்வு கொடுப்பது
   (a) வேகம் (b) இடப்பெயர்ச்சி (c) தொலைவு (d) முடுக்கம்
9. கீழ்வரும் வரைபடத்தில் சீரான இயக்கத்தில் நகரும் ஒரு பொருளைக் குறிப்பிடுவது எது?
   (a)  (b)  (c)  (d) 
10. ஒரு பொருள் நகரும்போது அதன் ஆரம்ப திசைவேகம் 5 மீ / விநாடி மற்றும் முடுக்கம் 2மீ/விநாடி^{2} . 10 விநாடி கால இடைவெளிக்குப் பிறகு அதன் திசைவேகம்
    (a) 20 மீ / விநாடி (b) 25 மீ / விநாடி (c) 5 மீ / விநாடி (d) 22.55 மீ / விநாடி
11. 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றவர் இறுதிப்புள்ளியை அடைய எடுத்துக்கொண்ட நேரம் 10 விநாடி எனில் வெற்றியாளரின் சராசரி வேகம்
    (a) 5 மீ / விநாடி (b) 20 மீ / விநாடி (c) 40 மீ / விநாடி (d) 10 மீ / விநாடி
12. திசைவேகம் – காலம் வரைபடம் உள்ளடக்கும் பரப்பளவு எதனைப் பிரதிபலிக்கிறது?
    (a) நகரும் பொருளின் திசைவேகம் (b) நகரும் பொருள் அடைந்த இடப்பெயர்ச்சி (c) நகரும் பொருளின் வேகம் (d) நகரும் பொருளின் முடுக்கம்
13. ஒரு மகிழுந்து 20 மீ / விநாடி வேகத்தில் இயக்கப்படுகிறது. தடையைப் பயன்படுத்தி 5 விநாடி கால இடைவெளியில் அது ஓய்வு நிலையைப் பெறுகிறது. இதில் ஏற்பட்ட எதிர்மறை முடுக்கம் என்ன
    (a) 4 மீ / விநாடி^{2} (b) - 4 மீ / விநாடி^{2} (c) - 0.25 மீ / விநாடி^{2} (d) 0.25 மீ / விநாடி^{2}
14. முடுக்கத்தின் அலகு
    (a) மீ / விநாடி (b) மீ / விநாடி^{2} (c) மீ விநாடி (d) மீ விநாடி^{2}
15. கீழ்க்கண்டவற்றில் எது பெரும்பாலும் சீரான வட்ட இயக்கம் அல்ல?
    (a) சூரியனைச் சுற்றி வரும் பூமியின் இயக்கம் (b) வட்டப் பாதையில் சுற்றி வரும் பொம்மை ரயிலின் இயக்கம்.
    (c) வட்டப் பாதையில் செல்லும் பந்தய மகிழுந்து (d) கடிகாரத்தில் மணி முள்ளின் இயக்கம்
16. துணி துவைக்கும் இயந்திரத்தில் ஆடையை உலர்த்தப் பயன்படும் விசை
    (a) மையநோக்கு விசை (b) மையவிலக்கு விசை (c) புவிஈர்ப்பு விசை (d) நிலை மின்னியல் விசை
17. மையவிலக்கு விசை ஒரு
    (a) உண்மையான விசை (b) மையநோக்கு விசைக்கு எதிரான விசை (c) மெய்நிகர் விசை (d) வட்டப் பாதையின் மையத்தை நோக்கி இயங்கும் விசை
18. திசைவேகம் – காலம் வரைபடத்தில் உள்ள பரப்பளவு குறிப்பது
    (a) இயங்கும் பொருளின் திசைவேகம் (b) இயங்கும் பொருள் கடந்த இடப்பெயர்ச்சி (c) இயங்கும் பொருளின் வேகம்
19. ஒரு பொருள் ஓய்வு நிலையிலிருந்து புறப்படுகிறது. 2 விநாடிக்குப் பிறகு அதன் முடுக்கம், இடப்பெயர்ச்சியை விட _____ இருக்கும்
    (a) பாதி அளவு (b) இரு மடங்கு (c) நான்கு மடங்கு (d) நான்கில் ஒரு பகுதி
20. 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றவர் முடிக்கும் புள்ளியை அடைய 10 விநாடி ஆனது. அவருடைய சராசரி வேகம் ---------- மீ / விநாடி
    (a) 5 (b) 10 (c) 20 (d) 40
21. சீரான வட்ட இயக்கத்தோடு தொடர்புடைய விசை ----------
    (a) f = mv^2/r (b) f = mvr (c) f= mr^2/v (d) f = v^2/r
22. திசைவேகம் - காலம் வரைப்பத்தில் உள்ள பரப்பளவு குறிப்பது
    (a) இயங்கும் பொருளின் திசைவேகம் (b) இயங்கும் பொருள் கடந்த இடப்பெயர்ச்சி (c) இயங்கும் பொருளின் வேகம் (d) மேற்குறிப்பிட்ட எதுவும் இல்லை
23. முடுக்கத்தின் அலகு
    (a) மீ / விநாடி (b) மீ / விநாடி^{2} (c) மீவி (d) மீவி^{2}
24. ஒரு பொருள் ஓய்வு நிலையிலிருந்து புறப்படுகிறது. 2 விநாடிக்குப் பிறகு அதன் முடுக்கம், இடப்பெயர்ச்சியை விட _____ இருக்கும்.
    (a) பாதி அளவு (b) இரு மடங்கு (c) நான்கு மடங்கு (d) நான்கில் ஒரு பகுதி
25. 100 மிட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றவர் முடிக்கும் புள்ளியை அடைய 10 விநாடி ஆனது. அவருடைய சராசரி வேகம் ____ மீ / விநாடி
    (a) 5 (b) 10 (c) 20 (d) 40
26. சீரான வட்ட இயக்கத்தோடு தொடர்புடைய விசை _____.
    (a) f = mv^2/r (b) f = mvr (c) f = mr^2/v (d) f = v^2/r
27. சரியான அறிக்கையை தேர்வு செய்க.
    (a) வினை மற்றும் எதிர்வினை விசைகள் ஒரே பொருளின் மீது செயல்படும். (b) வினை மற்றும் எதிர்வினை விசைகள் வெவ்வேறு பொருட்கள் மீது செயல்படும்.
    (c) (a) மற்றும் (b) இரண்டில் ஒன்று மட்டும் சரி
28. நேராகச் செல்லும் ஒரு பொருளின் இயக்கம் _____ எனப்படும்
    (a) நேர்கோட்டு இயக்கம் (b) வட்ட இயக்கம் (c) சுழற்சி
29. ஸ்கேலார் அளவுகளுக்கு _____ மட்டும் உண்டு.
    (a) திசை மட்டும் (b) எண் மதிப்பு மட்டும் (c) எண் மதிப்பும் திசையும்

30.மையநோக்கு விசையின் எண் மதிப்பு ___

(a) $F = \frac{mv}{r^2}$ (b) $F = \frac{m^2v}{r}$ (c) $F = \frac{mv^2}{r}$

31.V < u எனில் திசைவேகத்தின் மதிப்பு _____

(a) அதிகரிக்கிறது (b) குறைகிறது (c) மாறிலி

32.ஒரு பொருளின் சம காலத்தில் சமமற்ற தொலைவுகளை கடக்குமானால் அது ____ இயக்கம்.

(a) சீரான இயக்கம் (b) சிரற்ற இயக்கம் (c) வட்ட இயக்கம்

33.இயற்பியலில் பொருட்கள் அதன் நிலை மாறாமல் இருந்தால் அவை _____ ஆக உள்ளன எனப்படும்.

(a) இயங்கும் (b) ஓய்வு (c) இயங்கும் மற்றும் ஓய்வு (d) ஓடுதல்

34.பின்வருவனவற்றுள் பொருந்தாத ஒன்றினை கண்டுபிடி.

(a) சாலையில் ஓடுகின்ற கார் (b) பறந்து கொண்டிருக்கும் பறவைகள் (c) அறையில் உள்ள சுவர்கள் (d) மிதிவண்டி சாலையில் செல்லுதல்

35.வட்டப்பாதையில் செல்லும் பொருளின் இயக்கம் _____ .

(a) நேரான இயக்கம் (b) அலைவு இயக்கம் (c) ஒழுங்கற்ற இயக்கம் (d) வட்ட இயக்கம்

36.இடப்பெயர்ச்சி ஒரு _____ அளவீடு ஆகும்.

(a) வெக்டார் (b) ஸ்கேலார் (c) ஸ்கேலார் மற்றும் வெக்டார் (d) இவற்றில் ஏதுமில்லை

37.போக்குவரத்து நெரிசலில் செல்லும் பேருந்து _____ க்கு ஒரு உதாரணம்.

(a) சீரான இயக்கம் (b) சீரற்ற இயக்கம் (c) வேகம் (d) திசைவேகம்

38.திசைவேகத்தின் அலகு _____ .

(a) மீவி (b) மீ/வி^{2} (c) மீட்டர் (d) மீ/வி

39.ஒரு பொருள் சீரான திசைவேகத்தில் செல்லும் போது அதன் முழுவேகத்தையும் கால இடைவெளியையும் பெருக்கினால் கிடைப்பது ஆகும்.

(a) திசைவேகம் (b) காலம் (c) இடப்பெயர்ச்சி (d) முடுக்கம்

40.ஒரு பொருள் ஆரமுள்ள வட்டப்பாதையில் இயங்குகிறது எனில் பொருள் அரைவிட்டத்தை கடந்தபோது அதன் இடப்பெயர்ச்சி ____.

(a) சுழி (b) πr (c) $2r$ (d) $2\pi r$

41.பின்வரும் இயக்கத்தில் கடந்த தூரம், திசை, இடப்பெயர்ச்சி எந்தக்கூற்றில் சமம்.

(a) ஒரு மகிழுந்து நேரான சாலையில் இயங்குதல் (b) ஒரு மகிழுந்து வட்டப்பாதையில் இயங்குதல் (c) சந்திரன் பூமியைச் சுற்றுதல்
(d) தனி ஊசலின் இடவல இயக்கம்

42.கொடுக்கப்பட்டுள்ள திசைவேகம் - காலம் வரைபடத்தில் பொருள் பற்றி நீ தெரிந்து கொள்வது.

(a) சீரான இயக்கம் (b) இயங்கவில்லை (c) சீரற்ற இயக்கம் (d) சீரான முடுக்கத்தில் இயங்குகிறது

43.திசைவேக கால வரைபடத்தில் பரப்பளவின் அலகு _____ ஆகும்.

(a) மீ^{2} (b) மீ (c) மீ^{3} (d) மீ/வி

44.மீ/வி^{2} என்பது _____ என்பதன் அலகு.

(a) தூரம் (b) இடப்பெயர்ச்சி (c) திசைவேகம் (d) முடுக்கம்

45.இடப்பெயர்ச்சி மாறுபாட்டு வீதம் _____.

(a) வேகம் (b) திசைவேகம் (c) முடுக்கம் (d) எதிர்முடுக்கம்

46.ஸ்கேலார் அளவு ___ மட்டும் கொண்டது.

(a) எண் மதிப்பு (b) திசை (c) இரண்டும் (d) இவற்றில் ஏதும் இல்லை

47.ஒரு பொருள் முடுக்கமடைகிறதெனில் _____.

(a) எப்பொழுதும் திசைவேகம் அதிகமாகும் (b) எப்பொழுதும் வேகம் அதிகமாகும் (c) விசையுடன் செயல்படும் (d) மேற்கூறிய மூன்றும்

48.ஒரு மகிழுந்து 1.5 மீ/வி2 முடுக்கமடைந்து நேர் சாலையில் செல்கிறது எனில் 4 வினாடிகளில் திசைவேகம் எவ்வளவு அதிகமாகும்?

(a) 6 மீ/வி (b) 4 மீ/வி (c) 3 மீ/வி (d) 2.66 மீ/வி

49.தொலைவு - கால வரைபடத்தில் நேர்கோட்டின் சாய்வு அதிகரிக்க அதிகரிக்க _____ ம் அதிகரிக்கும்.

(a) திசைவேகம் (b) முடுக்கம் (c) இடப்பெயர்ச்சி (d) வேகம்

50.திசைவேகம் - காலம் வரைபடம் உள்ளடக்கும் பரப்பளவு எதனைப் பிரதிபலிக்கிறது?

(a) நகரும் பொருளின் திசைவேகம் (b) நகரும் பொருள் அடைந்த இடப்பெயர்ச்சி (c) நகரும் பொருளின் வேகம் (d) நகரும் பொருளின் முடுக்கம்

QB 365 Study Material
QUESTION BANK 365